**நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் சம்பந்தமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010 ஆம் ஆண்டு**

---

இவ்அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆவது பகுதி- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை

2 ஆவது பகுதி- ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## I ஆவது பகுதி

**நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| செலவினத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 102 | நிதி, திட்டமிடல் அமைச்சு |
| 237 | தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| 238 | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் |
| 239 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் |
| 240 | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் |
| 241 | அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் |
| 242 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் |
| 243 | அபிவிருத்தி நிதித் திணைக்களம் |
| 244 | வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் |
| 245 | அரச பொது நிதித் திணைக்களம் |
| 246 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் |
| 247 | இலங்கை சுங்கம் |
| 248 | மதுவரித் திணைக்களம் |
| 249 | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் |
| 250 | அரச கணக்குகள் திணைக்களம் |
| 251 | மதிப்பீட்டுத் திணைக்களம் |
| 252 | தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் |
| 280 | வெளிநாட்டு உதவி, வரவு செலவுத் திட்ட |

## (ஆ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 20 திணைக்களங்களுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 854,732,390,440 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 824,757,197,902 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 38,576 இற்கும் ரூபா 26,124,723,930 இற்கும் இடையிலான வீச்சில் அல்லது மொத்த தேறிய ஏற்பாட்டில் 0.27 % இற்கும் 95.54 % இற்கும் இடையிலான வீச்சுடைய சதவீதத்தில் இருந்தது. விபரம் பின்வருமாறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| -மேற்படி- | | 7,945,600,000 | 7,714,130,983 | (231,469,017) | 97.09 |
| -மேற்படி- | [redacted] | 25,363,000,000 | 26,712,441,526 | 1,349,441,526 | 105.32 |
| -மேற்படி- | | 300,000,000 | 294,841,046 | (5,158,954) | 98.28 |
| -மேற்படி- | | 2,375,000,000 | 2,272,957,122 | (102,042,878) | 95.70 |
| -மேற்படி- | [redacted] | 780,000,000 | 829,785,134 | 49,785,134 | 106.38 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | | 1,050,000,000 | 1,068,735,261 | 18,735,261 | 101.78 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 10.04.01.02 | 3,850,000,000 | 5,645,471,773 | 1,795,471,773 | 146.64 |
| -மேற்படி- | | 15,000,000,000 | 18,047,723,176 | 3,047,723,176 | 120.32 |
| -மேற்படி- | [redacted] | 51,578,000,000 | 51,507,698,053 | (70,301,947) | 99.86 |
| -மேற்படி- | | 16,000,000,000 | 16,268,173,200 | 268,173,200 | 101.68 |
| -மேற்படி- | | 31,256,000,000 | 29,422,008,983 | (1,833,991,017) | 94.13 |
| -மேற்படி- | [redacted] | 11,344,000,000 | 9,239,680,706 | (2,104,319,294) | 81.45 |
| -மேற்படி- | | 6,000,000,000 | 5,485,416,573 | (514,583,427) | 91.42 |
| -மேற்படி- | | 12,000,000 | 6,810,657 | (5,189,343) | 56.76 |
| தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் | [redacted] | 85,000,000 | 100,166,569 | 15,166,569 | 117.84 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | | 670,000,000 | 696,660,029 | 26,660,029 | 103.98 |
| -மேற்படி- | | 60,200,000 | 73,067,579 | 12,867,579 | 121.37 |
| -மேற்படி- | [redacted] | 7,641,000,000 | 6,549,368,192 | (1,091,631,808) | 85.71 |
| -மேற்படி- | | 1,200,000,000 | 1,468,032,576 | 268,032,576 | 122.34 |
| அரச பொது தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் | | 38,116,000,000 | 26,330,730,782 | (11,785,269,218) | 69.08 |
| -மேற்படி- | [redacted] | 1,384,000,000 | 4,970,556,572 | 3,586,556,572 | 359.14 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | | 78,000,000 | 100,231,718 | 22,231,718 | 128.50 |
| பிரதான மதிப்பீட்டாளர் | | 25,000,000 | 19,179,282 | (5,820,718) | 76.72 |
| அரச பொது தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் | [redacted] | 28,000,000 | 32,607,518 | 4,607,518 | 116.46 |
| -மேற்படி- | | - | - | - | - |
| திறைசேரிச் செயற்பாடுகள் | | 4,150,000,000 | 2,775,977,088 | (1,374,022,912) | 66.89 |

**(ஆ) எல்லைகளைப் பின்பற்றுதல்**

அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களினால் வணிகரீதியற்ற 03 முற்பணக் கணக்குகளின் செயற்பாடுகளில் பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் பின்வருமாறு பின்பற்றப்பட்டிருந்தன.

| திணைக்களம் | விடய இலக்கம் | அதிகூடிய செலவின எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய வரவு மீதி எல்லை | உள்ளவாறானது |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| இலங்கை சுங்கம் | 24702 | 5,500,000 | 2,843,564 | 1,200,000 | 1,446,652 | 18,000,000 | 11,286,840 |
| அரசாங்க கணக்குகள் | 25002 | 5,550,000 | 4,577,384 | 4,700,000 | 5,029,646 | 4,800,000 | 1,153,645 |
| -மேற்படி- | 25003 | 30,000,000 | 27,758,057 | 37,200,000 | 40,939,982 | 560,000,000 | 547,443,046 |

### 3.3.3 கலைத்தல் முற்பணக் கணக்குகள்

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக 05 கலைத்தல் முற்பணக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தன. 2011 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பின்வரும் அந்த முற்பணக் கணக்குகள் 05 உம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| திணைக்களம் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு |
|---|---|---|
| அரசாங்க நிதி | 7000/0/0/999-05 | சிறு கைத்தொழில் திணைக்களம் |
| | 7000/0/0/999-06 | சிறு கைத்தொழில் திணைக்களம் |
| | 7000/0/0/999-08 | வியாபாரப் பொருட் கொள்வனவுத் திணைக்களம் |

## 2 ஆவது பகுதி

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விரிவான அறிக்கை

---

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 102 – நிதி, திட்டமிடல் அமைச்சு

---

நிதி, திட்டமிடல் அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 03 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

| காரணம் | காலப்பகுப்பாய்வு | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | வருடம் 1 இற்கு குறைவு | 1 வருடத்திற்கு மேல் 2 இற்கு குறைவு | 2 வருடத்திற்கு மேல் 3 இற்கு குறைவு | 3 வருடத்திற்கு மேல் | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| சேவைநிலைய மாற்றம் | 488,376 | - | - | - | 488,376 |
| ■ ஓய்வு பெறல் | - | - | - | 135,757 | 135,757 |
| மரணித்தல் மற்றும் சேவையை விட்டுச் செல்லல் | 75,280 | 82,191 | - | 1,247,560 | 1,405,031 |
| கூட்டுத்தாபனம்/ சபை சேவைக்காக நிரந்தரமாக விடுவிப்புச் செய்யப்பட்டவர்கள் | 876,044 | - | 218,775 | 56,679 | 1,151,498 |
| ■ அகற்றப்பட்ட கொள்கைத் திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயற்படுத்துவதற்குரிய அமைச்சிற்குச் சொந்தமான மீதிகள் | - | - | - | 782,791 | 782,791 |
| மொத்தம் | **1,439,700** | **82,191** | **218,775** | **2,222,787** | **3,963,453** |

## (ii) அகற்றப்பட்ட கொள்கைத் திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயற்படுத்துவதற்குரிய அமைச்சிற்குச் சொந்தமான மீதிகள்

2004 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட கொள்கைத் திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயற்படுத்துவதற்குரிய அமைச்சிற்குச் சொந்தமான கடன் மீதிகள் தொடர்பான நடவடிக்கை எடுத்தல்கள் நிதி, திட்டமிடல் அமைச்சிற்குக் கையளிக்கப்பட்டிருந்தன.

அவ்வாறு கையளிக்கப்பட்ட தொகையில் 2010 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 8,372,085 தொகை இனங்காணப்படாத கடன் மீதியாக இருந்தது. இது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சின் அடிப்படையில் அகற்றப்பட்ட கொள்கைத் திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயற்படுத்துவதற்குரிய அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் இருந்த அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்ட தொகையில் ரூபா 8,372,085 தொகை மீளப்பெறப்பட்டு அந்த இனங்காணப்படாத மீதி தீர்க்கப்பட்டிருந்தது. இவ்வாறு இந்த மீதிகள் இனங்காணப்படாதிருந்ததுடன் இத் தொகை பொது வைப்புக்கணக்கில் செலவு வைக்கப்பட்டமையையும் உறுதிப்படுத்த முடியாதிருந்நது.

**(இ) கட்டுநிதிக் கணக்குகள்**

2004 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட கொள்கைத் திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயற்படுத்துவதற்குரிய அமைச்சிற்குச் சொந்தமான நிதி அமைச்சின் கீழ் கையளிக்கப்பட்டதன் பின்னரும் இது வரையிலும் தீர்க்கப்படாத 05 கட்டுநிதிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 120,012,635 ஆன வரவு மீதி மற்றும் 3 கட்டுநிதிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,864,733 ஆன செலவு மீதியாகவும் இருந்தது.

## 1.4 இணங்காமைகள்

### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **அரசாங்க நிதிச் சுற்றுநிரூபம்** | |
| (i) 1995 திசெம்பர் 18 ஆந் திகதிய 340(1) ஆம் இலக்க சுற்று நிருபம் | அமைச்சினுடைய வாகனங்களை விற்றுத்தீர்க்கும் போது நியமிக்கப்படுகின்ற மதிப்பீட்டுச் சபையின் தலைவராக அமைச்சின் |

## 1.8.3 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 1.8.3.1 நிதிசார் மீளாய்வு

#### 1.8.3.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 4,472,078 மிகையாகக் காணப்பட்டது. இதற்கு ஒப்பாக கடந்த ஆண்டிற்கான மிகை ரூபா 17,776,883 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மிகை முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் ரூபா 13,304,805 குறைவாகக் காணப்பட்டது.

#### 1.8.3.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசாா மீளாய்வு

மீளாய்வாண்டு தொடர்பாக நிறுவகத்தின் அடிப்படை குறிக்கோள்களான பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானம் ரூபா 37,812,500 தொகையானதுடன் இதன் கீழ் பெறப்பட்ட உள்ளபடியான வருமானம் ரூபா 22,584,150 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், திட்டமிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 15,228,350 ஆல் அதாவது 40% ஆல் குறைவடைந்திருந்தது. அரசாங்க மானியங்களுக்கும் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடுகளுக்கும் முன்னர் மதிப்பிடப்பட்ட தேறிய வருடாந்த வருமான மிகை ரூபா 9,400,000 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான தேறிய வருடாந்த வருமான மிகை ரூபா 4,867,074 ஆகக் காணப்பட்டது. இது மதிப்பிடப்பட்ட தேறிய வருமான மிகையின் 48% குறைவாகும்.

அரசாங்க மானியங்களுக்கும் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடுகளுக்கும் முன்னர் கடந்த ஆண்டுகளின் போது தேறிய இலாப வீதம் 36.53% ஆன போதிலும் மீளாய்வாண்டின் போது இது 14.99% வரை குறைவடைந்திருந்தது. இங்கு மதிப்பிடப்பட்ட தேறிய இலாப வீதமும் 25.57% ஆல் குறைவடைந்திருந்தது. இக் குறைவிற்கு மதிப்பிடப்பட்ட தேறிய இலாபத்தைப் பார்க்கிலும் உள்ளபடியான வருமானம் 30.45% இனால் குறைவடைந்தமை, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பயிற்சி வருமானத்தின் நேரடிச் செலவு வீதம் 23% ஆலும் மொத்த வருமானத்தில் மொத்தச் செலவின வீதம் 34% ஆலும் அதிகரித்தமை போன்ற காரணிகள் தாக்கமளித்திருந்தன.

இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 504,458 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது. அதன் காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

**காலப்பகுப்பாய்வு**

| **காரணம்** | **வருடம் 1 இற்கு குறைவு** | **3 வருடத்திற்கு மேல்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| சேவைநிலைய மாற்றம் | 225,170 | - | 225,170 |
| சேவையிலிருந்து அகற்றல் | - | 204,989 | 204,989 |
| மரணித்தல் | - | 74,299 | 74,299 |
| மொத்தம் | **225,170** | **279,288** | **504,458** |

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ. 9(i) பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் 06 செலவின விடயங்களில் ரூபா 288,092 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

## 2.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

அறிக்கைகளில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வருமானம் தொடர்பான தரவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

விடய இல. 23801 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 875,362 ஆக இருந்தது.

## 3.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | | [redacted] | |
| (ii) | மூன்றாம் நிலை | | | |

| | |
|---|---|
| திகதிய 06/2010 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரினால் காசேட்டைத் தீர்த்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த உத்தியோகத்தர் மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டிருந்தார். |

## 4.5 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைககளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | | [redacted] | | |
| (ii) | மூன்றாம் நிலை | | | | |
| (iii) | இரண்டாம் நிலை | [redacted] | | | |
| (iv) | ஆரம்ப நிலை | [redacted] | | | |
| | மொத்தம் | 143 | 104 | 45 | 06 |

## 5. ஒதுக்கீட்டுத் தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை

| வருமானக் குறியீடு/ விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
| --- | --- |
| 20.01.03.00 | வருமானக் கணக்கு |
| 24001 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள் |

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

தலைப்பு 240 இன் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 820,000 கூட்டுத்தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 104,000,000 கூட்டுத்தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்குகள்**

2011 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் திணைக்களத்தினால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 342,857 ஆக இருந்தது. அம்மீதியினுள் ரூபா 87,426 தொகை இதுவரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் ரூபா 83,325 தொகை 2008 ஆம் ஆண்டிலிருந்தும் எஞ்சிய ரூபா 172,106 தொகை 2010 ஆம் ஆண்டிலிருந்தும் கொண்டுவரப்படுகின்ற மீதியாகும்.

**(ஈ) வருமானக் கணக்குகள்**

(i) 2010 இன் வருமானக் கணக்கில் ரூபா 85 மில்லியனான ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 65 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கில் அவ்வாறு திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டுத் தொகை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 செயலாற்றல்

### பிரதான செயற்பாட்டிற்கு முரணான செயற்பாடுகள் (நோக்கத்திற்கு புறம்பானவைகள் போன்றன)

திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டிற்குப் புறம்பாக செயற்பட்டிருந்த சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பான விபரம் கீழே காட்டப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அலுவலக இட வசதிகளை வழங்கியமைக்கான வாடகை மற்றும் மின்சாரம் என்பவைகளுக்கான வைப்புப் பணமாக ரூபா 4,476,795 தொகை தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் செலவின விடய இல. 240-01-01-1405 இல் செலவு செய்யப்பட்டிருந்தது.

## 5.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | | [redacted] | |
| (ii) | மூன்றாம் நிலை | | | |
| (iii) | இரண்டாம் நிலை | [redacted] | | |
| (iv) | ஆரம்ப நிலை | [redacted] | [redacted] | |
| | மொத்தம் | 156 | 117 | 39 |

## 5.8 உள்ளகக் கட்டுப்பாடு

1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் முறையாகவும் நாளதுவரையாகவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. ஒதுக்கீட்டுத் தலைப்பு 241 – அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்

அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 05 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 6.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச்

கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார செயற்பாடுகள் சுற்றுநிருபத்தின் 4(உ) பந்தியின் பிரகாரம் கணக்குகள் கிரமமாக திறைசேரியின் கணக்குகளுடன் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

iii. ரூபா 17,000,000,000 தொகையான ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 38,116,000,000 என திருத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் தேறிய வருமானம் ரூபா 26,330,730,782 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் தேறிய வருமானம் ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தில் 155% மற்றும் திருத்தப்பட்ட வருமானத்தில் 69% ஆகவும் இருந்தன.

**(iii) வருமானத் தலைப்பு – 20-02-04-00 பங்கிலாபம்**

i. 2006 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 187/2006 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரி கணனி அச்சுப்பிரதியை திணைக்களப் புத்தகங்களுடன் இணக்கஞ் செய்து அது தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் இறுதித்தினம் வரையில் அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் சாயகத்திற்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2010 ஆம் ஆண்டின் ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 3,100,000,000 ஆக இருந்த போதிலும் அது ரூபா 3,000,000,000 என அதாவது ரூபா 100,000,000 இனால் கணக்குகளில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

iii. 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார செயற்பாடுகள்

மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) மற்றும் (ஆ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 7.4 மற்றும் 7.5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

திணைக்களத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதி வரையும் 24201 ஆம் இலக்க அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

07 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய ஏற்பாட்டில் 27% தொடக்கம் 92% வரையான வீச்சிலான சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

**7.4 செயலாற்றல்**

**வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்காமை**

கீழே குறிப்பிடப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(i) தெரிவு செய்யப்பட்ட நான்கு பிரிவுகளில் பதவியணியினர்களின் மீளாய்வு**

2010 ஆம் ஆண்டின் போது தொழில் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றின் பதவியணியினர் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் உரிய கோவைகளில் காணப்படவில்லை.

கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பவற்றின் பதவியணியினரில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் ஊடாக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டில் அச் செயற்பாடுகள்

## 8.4 இணங்காமைகள்

### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

2002 செப்தெம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் 2.4 ஆம் பிரிவின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை 2011 ஆகஸ்ட் 03 ஆந் திகதி வரையிலும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.5 செயலாற்றல்

2010 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு/ செயல்நடவடிக்கைத் திட்டங்களின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

திணைக்களம் பிரதான செயற்பாடுகளை போதியளவில் நிறைவேற்றியிக்காததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### i. சிறு நடுத்தர அளவான சேமிப்புக் கடன் உத்தேசத் திட்டம்

இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பிரிவில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான கடனாளிகளுக்கு கடன் தொகை வழங்கப்படும் போது அரசாங்க உத்தரவாதத்துடன் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பிரிவில் அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துவதற்காக 2008 ஆம் ஆண்டின் போது இந் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் அதற்காக ரூபா 20 மில்லியன் அவ்வாண்டில் இலங்கை மத்திய வங்கிக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. 2009

| | ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | | | [redacted] |
| (ii) | மூன்றாம் நிலை | | | |
| (iii) | இரண்டாம் நிலை | [redacted] | | [redacted] |
| (iv) | ஆரம்ப நிலை | | | |
| | மொத்தம் | 63 | 44 | 19 |

## 9.5 உள்ளகக் கட்டுப்பாடு

1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

## 10. ஒதுக்கீட்டுத் தலைப்பு 245 – அரச பொது நிதித் திணைக்களம்

அரச பொது நிதித் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 சனவரி 30 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

02 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய ஏற்பாட்டில் 27% மற்றும் 28% சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

**(இ) கலைத்தல் முற்பணக் கணக்குகள்**

05 கலைத்தல் கணக்குகளில் அங்கீகரிக்கப்படாத திரண்ட செயற்பாட்டு நட்டங்களின் கூட்டுத்தொகை ரூபா 560,088,622 ஆக இருந்தது.

## 10.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைககளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | | | | |
| (ii) | மூன்றாம் நிலை | | | | |
| (iii) | இரண்டாம் நிலை | | [redacted] | | [redacted] |
| (iv) | ஆரம்ப நிலை | | | [redacted] | |
| | மொத்தம் | 75 | 62 | 17 | 04 |

## 10.5 உள்ளகக் கட்டுப்பாடு

திணைக்களத்தினால் 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்காமையினால் நிலையான சொத்துக்கள்

தொடர்பாக பேணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகள் நலிவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 11. ஒதுக்கீட்டுத் தலைப்பு 246 – உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 திசெம்பர் 30 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 11.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

இருந்தது. அம் மீதிகளில் ரூபா 13,441,364 தொகை 2009 மார்ச் 27 திகதி தொடக்கம் கொண்டுவரப்படுகின்ற மீதியாகும்.

(ii) திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த உப கட்டுநிதி மீதி ரூபா 21,782,750 ஆக இருந்ததுடன் அக்கணக்கின் பொழிப்பு தயாரித்தல் வழுவாக ரூபா 34,294 தொகை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் வழங்கப்பட்ட கட்டுநிதி நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிக தாமதமின்றி மீளக் கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக செயற்பட்ட காரணத்தினால் ரூபா 637,950 தொகையான வழங்கப்பட்ட தபால் கட்டுநிதி 2010 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்குகள்**

(i) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 194,590 தொகையான 04 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 215(3) இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் போதும் 2010 ஆம் ஆண்டின் போதும் செலவினங்களைச் செய்வதற்காக பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 517,710,000 தொகையில் எஞ்சிய ரூபா 38,010,472 தொகையினை அரசாங்க வருமானத்திற்கு மாற்றுதவற்கோ அல்லது 2011 ஆம் ஆண்டின் செலவினங்களைச் செய்வதற்காக முன்கொண்டு செல்வதற்கோ திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(உ) வருமானக் கணக்குகள்**

(i) சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் அறிக்கையிடப்பட்ட 25 வருமானக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 214,434,026,697 தொகையான வரி வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அவ் வரித் தொகையில் ரூபா 90,200,135,174 இற்காக மாத்திரம் காலப்பகுப்பாய்வு

அந் நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது. அவ்வாறு நிலுவையாக இருந்த தொகையில் ரூபா 905,464 தொகையானது 03 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திற்குரிய கடன் மீதியாகும்.

(ii) திணைக்களப் புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணனி அறிக்கைகள் என்பவற்றுக்கிடையே ரூபா 60,000 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன் 22 வருடங்களுக்கு முன்னர் அதாவது 1982 ஆண்டில் ஏற்பட்டிருந்த காசோலை மோசடி அதற்குத் தாக்கமளித்திருந்தன.

(iii) கிழக்கு மாகாண அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்த சிரேஷ்ட வரி உத்தியோகத்தரிடமிருந்து அளவிட வேண்டியிருந்த ரூபா 68,340 தொகை 2005 ஒக்தோபர் 11 ஆந் திகதிய பாதீட்டுச் சுற்றுநிருப இல. 118 இன் 3.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட்டு அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மூன்று பேர்களின் கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்காக ரூபா 65,589 கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் அத்தொகை முற்பணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அப் பெறுவனவுகளை கணக்குகளில் வைப்பதற்குரிய விபரங்களை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

(v) வேலை தடைசெய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 210,267 தொகை அறவிடமுடியாக் கடனாக உள்ளாக்கப்பட்டிருந்தது.

(vi) சேவையை விட்டுச் சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிட வேண்டியிருந்த ரூபா 718,556 தொகையான கடன் மீதி அறவிட முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது.

(vii) முற்பணக் கணக்கில் 09 ஆம் பட்டோலையில் காணப்படுகின்ற ரூபா 214,374 தொகையான கடன் மீதி அறவிட முடியாத கடனாக உள்ளாகியிருந்தது.

விபரங்கள் மற்றும் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் இலக்கம் என்பன குறிப்பிடப்படாதிருந்தமை.

**(ஆ) வரி தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

வருமான வரி கோவைகளின் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(i) வரிக் கோவை (i)**

i. இந்த வரியிறுப்பாளருக்குச் சொந்தமான வியாபாரத்திற்காக 2001 மார்ச் 31 ஆந் திகதி தொடக்கம் 2006 மார்ச் 31 ஆந் திகதி வரை மாத்திரம் வரி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் கணனி வலைப்பின்னல் முறைமையின் பிரகாரம் அவரிடமிருந்து 2011 ஆகஸ்ட் 26 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,574,125 தொகை அறவிடவேண்டியிருந்தது.

ii. இந்த வியாபாரம் நிறுத்தப்பட்டிருந்தமை பதிலின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும் 2006 மார்ச் 31 ஆந் திகதியின் பின்னர் அறிக்கை அனுப்பப்படாமை தொடர்பாக உரிய காலப்பகுதியின் போது நடவடிக்கை எடுக்காமையினால் நிலுவை வரியையும் செலுத்தாது வியாபாரத்தை மூடிவிடுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

**(ii) வரிக்கோவை (ii)**

i. 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் வரிக் கணிப்பீட்டின் போது விடுவிக்கப்படாத ரூபா 26,140,679 செலவினம் கணக்கீட்டு இலாபத்தில் சேர்க்கப்படாமையின் காரணமாக 2008/09 மதிப்பீட்டு வருடத்தில் ரூபா 9,149,238 தொகையான வருமான வரி குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

## 11.7 செயலாற்றல்

2010 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு / செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காட்டப்படுகின்றது.

### (அ) போதியளவில் அடையப்படாத பிரதான செயற்பாடுகள்

உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தவதற்கான ஒப்பந்தமொன்று 2009 ஆம் ஆண்டில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,564,898,000 தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 190,000,000 தொகையான 08 மாடிகளையுடைய வாகனத் தரிப்பிடமொன்றின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தன.

### (ஆ) திட்டமிடலும் செயலாற்றலும்

2010 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு பிரிவின் கீழும் காட்டப்பட்டிருந்த இலக்குகளை அமுல்படுத்துதல் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த இலக்குகள் காலப்பகுதியினுள்ளோ அதன் பின்னரோ அமுல்படுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. உதாரணம் :- கணனி அபிவிருத்தி, பந்தயம் மற்றும் சூதாட்ட வரி, முத்திரை வரி, பாரியளவில் வரி செலுத்துபவர்கள் மற்றும் உழைக்கும் போதே வரி செலுத்தும் பிரிவு என்பன செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இலக்கிடப்பட்ட செயல் நடவடிக்கைகளை அடைவதற்காக மீளாய்வு செய்யப்பட்ட முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 11.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

### சீராக்கப்பட வேண்டிய மீதி

2010 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரமும் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

----------------------------------------------------------------

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**(அ) அதிகாரப் பொறுப்பற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5:4:4 ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட உரிய செயற்பாடுகளுக்கு உரித்தற்ற செலவினங்களுக்காக முற்பணம் செலுத்த முடியாதிருந்தபோதும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் நவம் மாவத்தை கட்டிடம் புனர்நிர்மாணத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டில் காணப்பட்ட அசாதாரண நிலைமைக்காக ரூபா 5,144,831 தொகையும் குறித்த விடயத்திற்கு அல்லது ரூபா 8,000,000 தொகையும் விலை வேறுபாடுகளுக்காக ரூபா 2,057,932 தொகையுமாக ரூபா 15,202,763 கூட்டுத்தொகைக்காக ரூபா 3,040,352 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) ஏனையவை**

**(i) இறைவரி செலுத்துதல் ஆய்வு**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சொத்துக்காக இறைவரி செலுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

i. உள்நாட்டு இறைவரி கட்டிடத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களினால் அக் கட்டிடத்தில் அலுவலகம் இயங்கியிராததுடன் கட்டிடம் நவீன மயப்படுத்தப்பட்டதன் பின்னர் 2010 ஏப்ரல் மாதம் தொடக்கம் மீள அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டின் இறுதி மூன்று காலாண்டில் மாத்திரம் ஆதன வரிகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அலுவலகம் நடாத்தப்படாதிருந்த 2010 இன் முதலாவது காலாண்டிற்கான இறைவரி முன்னரே விடுவித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் அக்காலாண்டிற்காக ரூபா 1,746,889 தொகையான இறைவரி செலுத்தப்பட்டிருந்தது.

iii. இந்த உபகரணங்கள் மற்றும் பொருட்களை அகற்றும் போது நி.பி 297 மற்றும் 804 இன் பிரகாரம் முறையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(iv) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அலுவலகத்தை நடாத்துவதற்காக தனியார் நிறுவனங்களிலிருந்து கட்டிடங்களை வாடகைக்குப் பெறல்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

i. அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு இணங்காத வகையில் கொடுப்பனவு செய்தல்

* கட்டிடம் வாடகைக்குப் பெறுகின்ற போது ஒரு சதுர அடிக்கு ரூபா 90 தொகையான வாடகைக்கு மேலதிகமாக அவ் வாடகையில் 15% ஆன சேவைகள் கட்டணமும் செலுத்துவதற்காக 2009 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக 2010 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தினால் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் அதற்கு முரணாக ஒரு சதுர அடிக்கு ரூபா 15 படி 36,910 சதுர அடிகளுக்கு சேவைக் கட்டணமாக 13 மாதங்களுக்கு ரூபா 679,755 தொகை சேவைக் கட்டணம் மேலதிகமாக தனியார் கம்பனியொன்றுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

* கட்டிடத்திற்கான வாடகைக் கட்டணத்திற்கு மேலதிகமாக சேவைக் கட்டணம் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்படாதிருந்த தனியார் நிறுவனமொன்றிற்கு சேவைக் கட்டணமாக 2009 மார்ச் மாதம் தொடக்கம் 2010 மார்ச் வரையான காலத்திற்காக ரூபா 855,828 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையை உரிய நிறுவனத்திடமிருந்து அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்தேனும் அறவீடு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ii. 2007 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி திருத்த அதிகாரச் சட்டத்தின் 26 ³அ´ பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் சகல

(i) தரவு தயாரித்தல் பிரிவுகளால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிழந்த காசோலை விபரங்களின் பிரகாரம் 2010 சனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலத்திற்காக மாத்திரம் ரூபா 21,322,489 தொகையான 161 காசோலைகள் மதிப்பிழந்திருந்தன.

(ii) பெறப்பட்ட காசோலைகள் நிராகரிக்கப்பட்டு 06 மாதம் முதல் 02 வருடங்கள் வரை காலங் கடந்திருந்த ரூபா 7,309,625 தொகையான 56 காசோலைகளுக்காக கணக்காய்வுத் திகதியான 2011 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையிலும் புதிய காசோலைகள் பெற்றுக்கொள்ளுதலோ அல்லது காசாகக் செலுத்துதலோ இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் ரூபா 2,086,933 தொகையான 28 காசோலைகள் மதிப்பிழந்ததன் பின்னர் மீள அப் பணத்தை அறவீடு செய்வதற்காக 02 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்தன.

(iv) காசோலை மதிப்பிழந்ததன் பின்னர் மீளப் பெறப்பட்டிருந்த ரூபா 3,590,451 கூட்டுத்தொகையான 26 புதிய காசோலைகளும் மீளவும் மதிப்பிழந்திருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) சில வரியிறுப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசோலைகள் நிரந்தரமாகவே மதிப்பிழந்த காசோலைகளுக்கு உட்பட்டிருந்தன.

## 11.13 முகாமைத்துவ நலிவுகள்

திணைக்களத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குக் குழுவினால் பரிசோதனை செய்யப்பட்டதன் பின்னர் உருவான விடயங்கள் தொடர்பாக அரசாங்க கணக்கு குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சுகள், அதிகாரத் தரப்பினால் அமுல்படுத்துவதில் மந்த நிலை ஏற்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. விஷேடமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் ஏற்பட்டிருந்த பெறுமதி சேர் வரி மோசடி தொடர்பாக அரசாங்க கணக்குக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட கட்டளைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **தலைப்பு/ வருமானக் குறியீடு/ விடய இலக்கம்** | **கணக்கின் பெயர்** |
| --- | --- |
| 247 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| [redacted] | 15- வருமானக் கணக்குகள் |
| 24701 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் |
| [redacted] | கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவின முற்பணக்கணக்கு |
| [redacted] | நானாவித வைப்புக் கணக்கு |
| | சுங்க மேலதிக நேரம் மற்றும் கப்பல் சரக்கு பரிசோதனைக் கட்டண நிதியம் |
| [redacted] | சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ இழப்பீட்டு நிதியம் |
| | சுங்க உத்தியோகத்தர்களின் நன்கொடை நிதியம் |

**(ஊ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விடய இல. 24701 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 5,792,166 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ii) சேவையில் ஈடுபட்டுள்ள இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 323,323 கூட்டுத்தொகையான ஆதனக் கடன் மற்றும் நான்கு உத்தியோகத்தர்களில் ரூபா 502,561 தொகையான இடர்கடன் மற்றும் துவிச்சக்கர வண்டிக் கடன் மீதி என்பன கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(iii) தவணைப் பணம் குறைவாக அறவிடப்பட்டமை தீர்மானிக்கப்பட்ட கடன் எல்லையினைப் பின்பற்றாமை, உரிய நிறுவனங்களுக்காக குறிப்பிட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை, தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் தவணைப் பணம் அறவிடப்படாமை, தவணைப் பணம் அறவீடுகள் உரிய பிரகாரம் பதிவேடுகளில் உள்ளடக்கப்படாமை, உரிய பதிவேடுகளில் குறிப்பிட்ட தரவுகளை உள்ளடக்காமை, அறிவுறுத்தல்களின் பிரகாரம் கடன் பணம் தீர்க்கப்படாமை, கணக்குகளின் பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வுகள் என்பன ஒன்றுக்கொன்று வேறுபட்ட தகவல்கள் உள்ளடக்கியமை போன்ற சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

**(ஊ) ஏனைய முற்பணக் கணக்குகள்**

கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**12.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

**(அ) நியதிச்சட்ட அறிவுறுத்தல்கள்**

2008 சனவரி 01 ஆந் திகதிய 1350/13 ஆம் இலக்க வர்ததமானி அறிவித்தலின் பிரகாரம் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 முத்திரைக் கட்டணம் அறவிடப்படாத 123 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(ஆ) தாபன விதிக் கோவை**

XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.2 மற்றும் XIV ஆம் அத்தியாயத்தின் 28.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வாகன விபத்துக்கள் தொடர்பாகவும் பிரயாணச் செலவுகள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**(இ) நிதிப்பிரமாணம்**

வாகன விபத்துக்கள், கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள், செலவினப் பேரேடு மற்றும் நிலையான சொத்துப்பதிவேடுகள் போன்றவை தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 103, 104, 128, 225, 232, 262, 264, 447, 802 மற்றும் 1645 இன் சில அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**(ஈ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை**

எரிபொருள் மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பாக முறையே 1990 ஒக்தோபர் 19 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றிக்கையின் 04 ஆம் பந்தியின் 4.11 ஆம் பிரிவு மற்றும் 1992 பெப்ரவரி 18 ஆந் திகதிய 07/92 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விமானநிலைய வரி | 49,000 | 49,633 | 101.29 | 51,695 | 36,286 | 70.19 |
| செஸ் வரி ± (இறக்குமதி) | 27,926 | 28,022 | 100.34 | 29,804 | 26,938 | 90.38 |
| மோட்டார் வாகன அனுசரணை வரி | - | - | - | - | 1 | 100.00 |
| பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் வரி | 2,500 | 4,718 | 188.72 | 486 | 546 | 112.35 |
| செஸ் வரி ± ஏற்றுமதி) | 1,848 | 1,730 | 93.61 | 2,081 | 1,581 | 75.97 |
| விசேட வியாபாரப் பொருட்கள் வரி | 10,393 | 10,173 | 97.88 | 23,460 | 18,965 | 80.84 |
| உற்பத்தி வரி | | | | | | |
| ----------------------- | | | | | | |
| சிகரட் | 40,164 | 40,643 | 101.19 | 41,670 | 37,581 | 90.19 |
| மதுபானம் | - | 20 | 100.00 | - | 9 | 100.00 |
| பெற்றோலியம் | 25,973 | 28,038 | 107.95 | 22,500 | 23,018 | 102.30 |
| மோட்டார் வாகனம் | 20,420 | 21,199 | 103.81 | 8,500 | 3,192 | 37.55 |
| ஏனைய வருமானம் | 3,500 | 3,298 | 94.22 | 9,300 | 5,268 | 56.65 |
| ---------------------- | | | | | | |
| ஆடைகளுக்கான உள்நாட்டு செலவினக் கட்டணம் | 62 | 87 | 140.32 | 50 | 67 | 134.00 |
| | --------- | -------- | | ---------- | -------- | |
| மொத்தக் கூட்டுத்தொகை | 248,111 | 251,805 | 101.48 | 250,319 | 233,342 | 93.22 |
| | ======== | ====== | | ======= | ======== | |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2010 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தின் உள்ளவாறான செயலாற்றல்

வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களை விஞ்சிய காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 12.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரியதாக உருவாகியிருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

(அ) இலங்கை சுங்கத்தினால் பல்வேறு சுங்கத் தவறுகள் தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் அவ்விசாரணைகளின் போது சேகரிக்கப்பட்ட வருமானத்தில் உரிய சுங்க தவறுக்காக இழக்கப்பட்டிருந்த வரி வருமானத்தை வெளிப்படுத்துவதற்காக போதிளவான பங்களிப்புக்கள் மேற்கொள்ளப்படாதிருந்தமை முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 07 சுங்க விசாரணைகளில் மாத்திரம் இந்த முறையில் சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 85,580,000 ஆக இருந்த போதிலும் அத்தொகையில் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட தொகை ரூபா 25,674,000 ஆக இருந்தது. எஞ்சிய ரூபா 59,906,000 தொகையை உத்தியோகத்தர்களுக்கு பரிசு வழங்குவதற்காகவும் உத்தியோகத்தர்களின் நலன்புரி நிதியத்திற்கு ஒதுக்குவதற்காகவும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. மேலும் சுங்க உத்தியோகத்தர்களுக்கு பரிசினைப் பகிர்ந்தளிப்பதற்காகவும் உத்தியோகத்தர்களின் நலன்புரி நிதியத்திற்கு நிதியை ஒதுக்குதல் தொடர்பாக நாளதுவரையில் சட்டரீதியான திருத்தங்களுக்கு உட்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுங்கவரி மோசடி செய்யப்பட்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வியாபாரங்களில் நிலைத்துள்ள கம்பனி ஒன்றினால் இலங்கை முதலிட்டுச் சபையின் பிரமாணங்களுக்கு முரணாக தகவல்கள் அறிக்கையிட்டு மூன்று மாதங்களினுள் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகளில் மோசடி செய்யப்பட்ட வரித்தொகை ரூபா 57,276,549 ஆக இருந்தமை கோவைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. உரிய இறக்குமதியாளரிடமிருந்து ரூபா 30,000,000 தொகை அறவிடப்பட்டு சம்பவங்களைத் தீர்க்கும் ஏற்றுமதிக் கம்பனி மற்றும் இலங்கை சுங்கத்தின் சில உத்தியோகத்தர்கள் இணங்கியிருந்ததுடன் இங்கே ஏற்றுமதியாளர்களிடமிருந்து குறைவாக அறவிடப்பட்டிருந்த தொகை 27,276,549 ஆக இருந்தது. இதன்போது இலங்கை சுங்கத்திற்கான முறைப்பாடுகளைக் கையாளும் உத்தியோகத்தர்

போதிலும் அதில் அரசாங்க வருமானத்தில் நேரடியாக சேர்க்கக் கூடியதாக இருந்த தொகை அண்ணளவாக ரூபா 6,909,152 மாத்திரமாகும்.

(ஏ) இலங்கைக்கு மீன் இறக்குமதி செய்கின்ற இறக்குமதியாளர் பிழையாக விலையைக் குறைத்து காட்டப்பட்டிருந்தமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுங்க விசாரணைகளின் போது அவரால் தவறு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பிழையான வெளிப்படுத்தல்களைச் செய்தமையினால் செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்பட்ட வரி வருமானமாக கணிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 781,847 ஆக இருந்தது. 2007 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த இந்த வரி செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்த தொகையை 2010 செப்தெம்பர் மாதம் வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன் இந்த இறக்குமதியாளர் 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் 45 மீன் நிறுவனங்களை நடாத்தியிருந்த போதிலும் விசாரணை ஒரு நிறுவனத்தில் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. இந்த 45 நிறுவனங்களுக்காகவும் இறக்குமதியாளர் காண்பித்திருந்த விலை அளவுகள் வரி மோசடிக்குரிய விலை அளவுகளுக்கு அண்மித்த பெறுமதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்று உள்நாட்டு கிளையினால் வருடாந்தம் உழைக்கின்ற இலாபத்தை தாய்நாட்டிற்கு அனுப்புகின்ற போது செலுத்த வேண்டிய வரித்தொகை செலுத்துவதிலிருந்து தவிர்ந்திருந்த காரணத்தினால் 2004/2005 மற்றும் 2005/2006 ஆம் ஆண்டுகளுக்காக 2006 ஆம் ஆண்டின் போது அக் கம்பனிக்கு ரூபா 4 மில்லியன் தண்டமொன்று விதிக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து அறவிட வேண்டிய வரித்தொகையை அறவீடு செய்வதற்காக உரிய வேலைத்திட்டமொன்றை ஈடுபடுத்துவதற்காக 2010 ஆம் ஆண்டின் போது மீளவும் சுங்க விசாரணையொன்று நடாத்தப்பட்டு 2002/2003, 2003/2004 மற்றும் 2006/2007 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 7 மில்லியன் தண்டமொன்று விதிக்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு விசாரணைகளினதும் ஒரு உத்தியோகத்தர் தொடர்புபட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் 2007/2008, 2008/2009 ஆம் ஆண்டுகளுக்காக தீர்மானிக்கப்பட்ட வரித்தொகை 2010 ஆம் ஆண்டின் போதிலும் அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. மேலும் இந்த வரித் தொகையை அறவீடு செய்வதற்காக திரும்பவும் விசாரணைகளைச் செய்ய வேண்டியதை கணக்காய்வில் தவிர்க்க முடியாதிருந்தது.

(ஒ) 2006 ஆம் ஆண்டின் போது சுங்கவரி செலுத்துவதிலிருந்து தவரிந்திருந்த இறக்குமதியாளர்களுக்கு ரூபா 2,564,363 தொகை தண்டமாக

## 12.11 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிணை முறிகள் விசாரணை நடவடிக்கைகளுக்காக இலங்கை சுங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த பிணை முறிகள் விசாரணைப் பிரிவிற்கு 9 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆகஸ்ட் மாதம் வரை புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்த விசாரணைகளின் எண்ணிக்கை 116 மாத்திரமாகும். 2010 ஆகஸ்ட் மாதம் வரையில் இப்பிரிவில் நடவடிக்கைகள் நிறைவு பெறாத விசாரணைகளின் எண்ணிக்கை 452 ஆக இருந்ததுடன் அதில் 10 வருடங்களுக்கும் மேற்பட்ட 206 விசாரணைகளும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட 108 விசாரணைகளும், 05 வருடங்களுக்குக் குறைந்த 138 விசாரணைகளும் காணப்பட்டன.

(ஆ) கொள்கலன் செயற்பாட்டு நிலையங்களில் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக விபரமான தகவல்கள் காணப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்ட காரணத்தினால் விசாரணையின் இறுதியில் விற்பனை செய்வதற்கு தொடர்புபடுத்தப்பட்ட பொருட்கள் உண்மையாகவே அரசுடமையாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நிலையில் காணப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து பார்க்க முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதே பிரகாரம் கிரே லைன் I கொள்கலன் செயற்பாட்டு நிலையத்தில் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 6 கோவைகளில் உள்ளடக்கப்பட்ட 12 பொருள் விடயங்களின் விபரமான தகவல்கள் காணப்படாதிருந்தமையினால் கைப்பற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட பாகங்கள் விற்பனை செய்யும் சந்தர்ப்பங்களின் போது காணப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(இ) ஏற்றுமதி, இறக்குமதிகளின் போது அறவிடப்பட்ட சுங்கவரி பல்வேறு காரணங்களினால் மீளச் செலுத்தும் போது அதற்கான நடவடிக்கைகளைச் செய்வதற்கு தனியான பிரிவொன்று காணப்பட்ட போதிலும் அப் பிரிவின் செயலாற்றல் போதிய நிலையில் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது இப் பிரிவிற்கு 2008 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 3,711,596 பெறுமதியான 7 கோரிக்கைகள் தொடர்பாக 2010 செப்தெம்பர் 17 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையும் மூன்று கோரிக்கைகள் தொடர்பாக மீளச் செலுத்த

## 12.12 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | | | |
| (ii) | மூன்றாம் நிலை | [redacted] | | |
| (iii) | இரண்டாம் நிலை | | [redacted] | |
| (iv) | ஆரம்ப நிலை | ___ | [redacted] | ___ |
| | மொத்தம் | [redacted] | [redacted] | [redacted] |

ஆட்சேர்ப்புக்களுக்குரிய உத்தியோகத்தர்களின் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை பற்றி உரிய நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 12.13 உள்ளகக் கட்டுப்பாடு

(அ) கீழே குறிப்பிடப்படுகின்ற பகுதிகளின் முறைமை கட்டுப்பாடுகளில் நலிவுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டன.

(i) சம்பவப் பதிவேட்டினை பராமரித்தல், வேலை நிறைவு பெறாத சம்பவங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

(ii) அரசுடமையாக்கப்பட்ட பொருட்களை களஞ்சியப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.

(iii) உத்தியோகத்தர்களின் வருகை, வெளிச்செல்கைகளைப் பதிதல் மேலதிக நேரத்தை அறிக்கையிடல்.

**(ஆ) சேமிப்புக்களுக்கான காரணங்களைக் காட்டல்**

ஒதுக்கீட்டுக் கணக்கில் சில செலவின விடயங்களுக்கான சேமிப்புக்களில் காட்டப்பட்டிருந்த காரணங்கள் கணக்காய்வில் ஏற்றுக் கொள்வதற்கு முடியாத சந்தர்ப்பங்களாகக் காணப்பட்டன.

**(இ) பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் செலுத்துவதற்குள்ள பெறுமதிகள் போலியானதாக காட்டப்பட்டமையினால் 2011 ஆம் ஆண்டின் உள்ளவாறாகச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளுடன் ஒப்பிடப்பட்டு உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(ஈ)** பிரதேச அலுவலகங்களின் நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டணப் பட்டியல்களைத் தீர்த்தல்கள் சில்லறைக்காசு கட்டுநிதியில் செய்யப்படுவதுடன் அதன் பிரகாரம் ஆண்டில் எவ்வளவு தொகை செலுத்தவதற்கு இருந்தது என்பதை பரீட்சிக்க முடியுமான வகையில் பட்டியல் தீர்த்தல் பதிவேடுகள் தலைமை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிராகாரமும் பொறுப்புக்கள் தொடர்பாக தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

**(உ) வருமானக் கணக்குகள்**

(i) சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் அறிக்கையிடப்பட்ட வருமானக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 482 மில்லியன் தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்நிலுவையாக இருந்த வருமானம் 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரியதாக இருந்தது. அந்த நிலுவையாக இருந்த வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த முறையே ரூபா 1,972,000 மற்றும் ரூபா 21,926,064 தொகைகளின் கூட்டுத் தொகையான ரூபா 23,898,064 வரியற்ற வருமானம் 2010 ஆம் ஆண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

## 13.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாகக் காணப்பட்டது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

கட்டிட வழங்குனர்கள் தெரிவு செய்யப்படும் போது கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட செயல் நடைமுறைகளுக்குப் புறம்பாக போட்டியாளர்களின் விலைகள் கோரப்பட்டு செயற்திறனான வழங்குனர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 13.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஒழுங்கற்ற முறையில் நிறுவனத்திற்கு சாதகமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் கட்டிட வாடகையாக ரூபா 723,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

## 13.10 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட செயற்பாட்டு செயற்திறனின்மைகள் தொடர்பான பொழிப்பொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) 2006-2010 வரை திணைக்கள உத்தியோகத்தர்களின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த சீருடை இருப்புக்கள் களஞ்சியத்திற்கு உரிய ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்துவரும் மாதத்தின் ஆரம்பத்திலேயே கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் உரிய வருடங்களில் சீருடைகளின் தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது 155 டயர்கள் வாகனங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அந்த டயர் இருப்புக்கள் ஏடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அந்த டயர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகனப் பழுதுபார்த்தல் தொடர்பாக பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

**14.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**14.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 14.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

---

திணைக்களத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதி வரையும் பின்வரும் கணக்கு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப நிலை | | [redacted] | |
| | | -------- | -------- | -------- |
| | மொத்தம் | 123 | 98 | 25 |
| | | ==== | ==== | ==== |

## 15. ஒதுக்கீட்டுத் தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களம்

அரச கணக்குகள் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 05 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 15.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 15.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் அரச கணக்குகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஊ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 15.4 தொடக்கம் 15.6 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

06 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய ஏற்பாட்டில் 45.92% இற்கும் 87.41% இற்கும் இடையிலான சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

### (ஆ) கட்டுநிதிக் கணக்குகள்

2011 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் திணைக்களம் தீர்க்காதிருந்த கட்டுநிதிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,400,000 ஆக இருந்தது. அம் மீதிகள் 01 வருடத்திற்கு குறைவான காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற மீதியாகும்.

### (இ) பொதுவைப்புக் கணக்குகள்

2008 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டு நிதிப் பிரமாணம் 215 இன் பிரகாரம் பொதுவைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா 6,417,000 தொகையான வைப்பு மீதி 2011 மே 15 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### (ஈ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

விடய இல. 25001 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 304,625 ஆக இருந்ததுடன் அந்

திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அம் மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பனவுகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) நிதிப் பிரமாணம் 106 இன் பிரகாரம் காசு காணாமற்போனமைக்காக 02 அமைச்சுக்கள் மற்றும் 03 அலுவலகங்களுக்கு ரூபா 10,299,864 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறு ஏற்பட்ட காசு காணாமற்போனமைக்காக நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு பெறப்பட்ட கட்டளைகளின் படி மேலும் காணப்பட்ட நட்ட இழப்புக்கள் தொடர்பாக ஏற்பாடுகளைப் பெற்று முற்பணங்களை தீர்த்து வைக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு முற்பணம் பெற்ற நிறுவனங்களினால் 30 மாதங்கள் முதல் 106 மாதங்களுக்கிடையிலான கால இடைவெளியைக் கொண்டிருந்ததும் அம் முற்பணங்கள் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 15.4 செயலாற்றல்

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் கணக்காய்வு செய்யப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளின் பிரதிகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட வருமானக் கணக்குகள் என்பவற்றை சேர்த்து வெளியிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் என்பவற்றை மீளாய்வு செய்து திட்ட முறைகளில் குறைபாடுகள் காணப்படின் அவற்றை சீர் செய்வதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்த போதிலும் 2007 தொடக்கம் 2010 வரையான ஆண்டுகளில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் 2011 யூலை 31 ஆந் திகதி வரையிலும் வெளியீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 15.5 நட்டங்களும் இழப்புக்களும்

2004 யூலை 27 ஆந் திகதி விபத்துக்குள்ளாகிய வாகனமொன்றிலிருந்து மேலும் அறவிட வேண்டியிருந்த நட்டம் ரூபா 30,362 ஆக இருந்தது. 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதி அரசாங்க கணக்குகள் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் அவ் வாகனம் நிதி,

எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 16.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 16.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 16.4 தொடக்கம் 16.7 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

(i) மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதி வரையும் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

(i) விடய இல. 25101 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 719,237 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகள் ரூபா 56,363,767 ஆக இருந்ததுடன் தனிப்பட்ட மீதிப் பதிவேடுகளின் கூட்டுத்தொகை ரூபா 56,445,667 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 81,900 தொகையான வேறுபாட்டினை இணக்கஞ் செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 16.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

(i) செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவு பெற்றவுடன் உடனடியயாகவே தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 06 உத்தியோகத்தர்களுக்கு 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 105,000 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தன.

(ii) நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஒரு தடவையில் செயல்நிமித்த உப கட்டுநிதியாக வழங்க முடியுமான உச்ச தொகை ரூபா 20,000 ஆக இருந்த

ii. நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 50,484,083,750 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதிக்காக 156 அலகுகளுக்காக 55 மதிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பித்தமை

**(ஆ) செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---

**(i) கட்டிடத்தை நவீன மயப்படுத்தல்**

---

திணைக்களத்தின் முதலாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது மாடிகளை நவீன மயப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 8,915,847 தொகை (வரி தவிர்த்து) செலவிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் கொள்வனவு அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய போட்டியாளர் கூறுவிலைகளின் கீழ் கொள்வனவுகளுக்காக கூறுவிலைகள் சமர்ப்பிப்பதற்கு 21 நாட்கள் காலமொன்று வழங்கவேண்டியிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட நவீன மயப்படுத்தலுக்கான கொள்வனவுகளுக்காக 12 நாட்கள் காலம் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

iii. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பந்தியின் பிரகாரம் செயலாற்றல் காப்பு ஒப்பந்தப் பெறுமதியில் 5% இற்குச் சமமான அல்லது ரூபா 445,792 ஆக இருக்க வேண்டிய போதிலும் பெறப்பட்ட காப்புறுதி பெறுமதி ரூபா 200,000 ஆகும்.

iv. ஒப்பந்தங்களுக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் செயலாற்றல் காப்பு பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2010 நவம்பர் 01 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் காப்பு 2010 நவம்பர் 30 ஆந் திகதியே பெறப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| v. | கிழங்கு மற்றும் பெரிய வெங்காய உற்பத்தி மெய்மையாய்வு | பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| vi | விவசாய தொகையினர்களுக்காக செயற்பாடுகளைத் தயாரித்தல்- 2012 | பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 17.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறன சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### (அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலிருந்து தவிர்ந்தவைகள்

(i) 2006 ஆம் ஆண்டின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ) இன் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்தததுடன் 2010 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டத்தில் அச்சீடு 9,000,000 குடிசன கணிப்பீட்டு ஸ்டிக்கர்களின் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 9,000,000 குடிசன கணிப்பீட்டு ஸ்டிக்கர்கள் அச்சிடுவதற்கான ஒரு நிபந்தனையில் காலநிலையில் ஏற்படுகின்ற மாற்றங்களில் ஸ்டிக்கர்களின் தன்மை மாறாத வகையில் இருப்பதற்கு உடன்பட்டமை மற்றும் மேலும் ஒரு நிபந்தனையில் ஆகக் குறைந்தது 12 மாதங்களுக்கான உத்தரவாதம் என்பவற்றிற்காக இணக்கப்பாடு பெறப்பட்டிருந்தன. இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த 02 நிறுவனங்களில் ஒரு நிறுவனத்தின் மாதிரிகளில் காலநிலை மாற்றங்களின் கீழ் ஸ்டிக்கர்களின் தன்மைகளில் மாற்றங்கள் ஏற்படாதமை குறிப்பிடப்பட்ட நிபந்தனையில் இரண்டாவது பகுதி பூரணப்படுத்தப்படாத காரணத்தினால் அக்கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த நிறுவனத்தின் மாதிரி குறிப்பிட்ட நியமத்தில் காணப்பட்டிருந்தும் உத்தரவாதம் தொடர்பான நிபந்தனைகளை உள்ளடக்கிய ஏனைய சகல நிபந்தனைகளுக்கும் இணங்கப்பட்டிருந்தும் இந்த நிராகரித்தலை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 18.4 செயலாற்றல்

2010 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு / செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் எங்கேயும் அமுல்படுத்தப்படாது / போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தாப்பங்கள் பின்வருமாறு.

(i) 2010 ஆம் ஆண்டில் மேற்பார்வை பொறிமுறையை தேசிய மற்றும் உப தேசிய நிலைகளில் வலுப்படுத்துவதற்காக ரூபா 3,000,000 தொகையான ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படாமையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மொத்தத் தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) அபிவிருத்திப் பெறுபேற்று முகாமைத்துவத்தின் கீழ் பெறுபேறுகள் அடைந்து கொள்ளப்பட்ட நிறுவனங்களின் விபரங்களை அமைச்சுக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கான வழிகாட்டிக் கைநூலை அச்சிடுதல் 2010 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த ஏற்பாட்டுத் தொகையான ரூபா 1,000,000 உம் சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) இத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கிடையில் வெளிநாட்டுதவி செயற்திட்டங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மேற்பார்வைக்கு மேலதிகமாக வெளிநாட்டுதவிப் பயன்பாடு மற்றும் அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை துரிதப்படுத்துவதற்காக ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் வெளிநாட்டுதவிகளின் உபயோகித்திலுள்ள நலிவுகளைத் திருத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் பிரதானமாக இருந்த போதிலும் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்பட்ட அ.டொ. 05 மில்லியனுக்கும் மேற்பட்ட வெளிநாட்டுதவி செயற்திட்டங்களில் குறிப்பிட்ட கால அட்டவணையினுள் அமுல்படுத்தப்படாத

## 19.2 கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 19.3 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) இலுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 19.4 மற்றும் 19.5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) தலைப்பு 296 இன் கீழ் 01 செலவின விடயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையினால் ரூபா 430,000 கூட்டுத்தொகையான தேறிய ஏற்பாட்டில் ரூபா 284,219 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன. சேமிப்பு ரூபா 145,781 ஆக இருந்ததுடன் அச்சேமிப்பு அது தேறிய ஏற்பாட்டில் 20% இற்கும் 100% இற்கும் இடையிலான சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

திணைக்களம் பிரதான செயற்பாடுகளை போதியளவில் அமுல்படுத்தியிராததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

i. 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வழக்கு நடவடிக்கைகளுக்காக கிடைத்திருந்த கோவைகளின் எண்ணிக்கை 59 ஆக இருந்தும் அதில் 24 வழக்குகள் அதாவது 41% அளவில் மாத்திரமே வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

ii. சட்ட ஆலோசனைகள் வழங்குவதற்காக 11 கோவைகள் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கிடைத்திருந்த போதிலும் 02 கோவைகளின் வேலை அதாவது 18% அளவில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**20.5 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | | | [redacted] |
| (ii) | இரண்டாம் நிலை | | | |
| (iii) | ஆரம்ப நிலை | | 3 | 3 |
| | மொத்தம் | 26 | 14 | 12 |

i. இத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளுக்கிடையில் முகாமைத்துவ கணக்காய்வு தொடர்பான பயிற்சி செயலமர்வுகளை ஒழுங்கமைப்பதன் மூலம் உள்ளகக் கணக்காய்வு அலகுகளில் கணக்காய்வு பயிலுனர்களின் இயலுமையை முன்னேற்ற முடியுமாக இருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டின் போது இதற்காக நடாத்தப்பட்டிருந்த செயலமர்வுகளின் எண்ணிக்கை 02 மாத்திரமாகும். இந்த செயற்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடு ரூபா 293,000 ஆகும். இதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் இயலுமையை முன்னேற்றுவதற்காக நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகள் போதியளவாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்படுகின்றது.

ii. உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டிகளை உள்ளடக்கிய கைநூல் ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் விடயங்களில் புதிய நுட்பங்களை உட்படுத்துவதன் மூலம் அதனை நாளதுவரையாக்குதல் இந்த திணைக்களத்தின் செயற்பாடாகும். இருந்தும் இந்த கைநூலை அறிமுகப்படுத்துதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 21.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | | | [redacted] |
| (ii) | இரண்டாம் நிலை | [redacted] | | |
| (iii) | ஆரம்ப நிலை | | | |
| | மொத்தம் | 39 | 29 | 10 |

| | | |
|---|---|---|
| 8813 | இலங்கை மத்திய வங்கி சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் விசேட டொலர் கணக்கு | 6,041,924,364 |
| 8918 | இலங்கை மத்திய வங்கியின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் விசேட டொலர் கணக்கு | 3,325,223,435 |
| 8973 | இலங்கை மத்திய வங்கியின் விசேட டொலர் கணக்கு (விவசாய அபிவிருத்தி கடனுக்கான சர்வதேச நிதியம்) | 177,599,233 |
| 9094 | இலங்கை மத்திய வங்கியின் விசேட யென் கணக்கு | 19,286,310,929 |
| 9101 | இலங்கை மத்திய வங்கியின் விசேட டொயிஷ் மார்க் கணக்கு | 187,937,603 |
| 9110 | இலங்கை மத்திய வங்கியின் விசேட நோர்டின் கணக்கு | 2,168,712 |
| 9114 | விசேட ரூபாய்க் கணக்கு | (15,735,820,472) |
| 9125 | வெளிநாட்டு விசேட மாற்றல் கணக்கு பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனம் | 511,414,839 |
| | மொத்தம் | **(58,278,914,237)** |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திறைசேரி பிரதிச் செயலாளரின் வங்கிக் கணக்கில் மேலதிகப் பற்று ரூபா 76,527,923,075 ஆக குறிப்புக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அம்மீதியும் வங்கிக் கணக்குகள் 8 இன் சாதகமான மற்றும் பாதகமான மீதிகளுடன் உருவாகியிருந்ததாக அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **கணக்கின் பெயர்** | **2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி** |
|---|---|
| -------- | [redacted] ரூபா |
| இலங்கை மத்திய வங்கியின் 02 கணக்குகளில் சாதகமான மீதி | 249,728,132 |
| இலங்கை வங்கியின் கணக்கு | (52,952,416,720) |
| இலங்கை வங்கி கணக்குகள் 04 | 10,164,361,437 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2000 | 7002 | 325 | 0 | வரவு | 10,854,275 | | | 10,854,275 | |
| 2008 | 7002 | 35 | 8 | வரவு | 388,449,682 | 5,442,555 | 14,060,044 | 379,832,193 | |
| 2009 | 7002 | 35 | 9 | வரவு | 275,381,827 | 215,649 | 62,199,155 | 213,398,321 | |
| **மொத்தம்** | | | | | **860,644,505** | **5,658,204** | **76,930,888** | **1,012,782,031** | **223,410,210** |

(iii) மீளளிக்கக் கூடிய வெளிநாட்டு உதவிகள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகரித்த அனுமதித்த கட்டுநிதியின் சாதகமான மீதியாக ரூபா 103,979,252 காசு மற்றும் காசுக்கு சமமானவையாகக் கருதி வங்கி மேலதிகப் பற்றிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. அக்கட்டுநிதி மீதியிலிருந்து கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் ரூபா 75,402,897 ஆன வரவு மீதி மற்றும் ரூபா 25,632,787 செலவு மீதி என்பன 01 ஆண்டு முதல் 14 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாக இருந்து வரும் மீதிகளுடன் கூடியதாக இருந்தன. ரூபா 75,402,897 தொகையான வரவு மீதிகளில் 11 கணக்குகளுக்குரிய ரூபா 20,286,631 ஆன மீதிகள் 2012 யூன் 25 ஆம் திகதி வரையில் கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 25,632,787 ஆன செலவு மீதிகளிலிருந்து 2012 யூன் 25 ஆம் திகதி வரையில் கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு ரூபா 25,617,787 தொகை தீர்க்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கணக்குகளை இணக்கம் செய்து தீர்க்கக்கூடியதாக இருந்த மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காசு மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தன.

| ஆண்டு | கணக்கிலக்கம் | | | | 2010 சனவரி 01 இல் மீதி | வரவு வைத்தல் | ஆண்டின் செலவு வைத்தல் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி வரவு | செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| [redacted] | | | | | | [redacted] | | | |
| | | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா. | ரூபா. |
| 1996 | 7003 | 372 | 0003 3 | வரவு | 20,000,000 | | | 20,000,000 | |
| 2001 | 7003 | 11 | 1 | செலவு | (13,165,062) | | | | 13,165,062 |
| 2001 | 7003 | 43 | 1 | வரவு | 11,359 | | | 11,359 | |
| 2002 | 7003 | 43 | 2 | வரவு | 60,136 | | | 60,136 | |
| 2003 | 7003 | 62 | 3 | செலவு | (4) | | | | 4 |
| 2003 | 7003 | 64 | 3 | வரவு | 10,868,883 | | | 10,868,883 | |
| 2003 | 7003 | 68 | 3 | செலவு | (717,793) | | | | 717,793 |
| 2004 | 7003 | 43 | 4 | செலவு | (15,000) | | | | 15,000 |
| 2004 | 7003 | 64 | 4 | செலவு | (3,870,845) | | | | 3,870,845 |
| 2004 | 7003 | 68 | 4 | செலவு | (981,878) | | | | 981,878 |
| 2005 | 7003 | 13 | 5 | செலவு | (2,430,616) | | | | 2,430,616 |
| 2005 | 7003 | 43 | 5 | வரவு | 16,724,428 | | | 16,724,428 | |
| 2006 | 7003 | 13 | 6 | வரவு | 2,109,395 | | 333,267 | 1,776,128 | |
| 2006 | 7003 | 82 | 6 | வரவு | 3,500,000 | | | 3,500,000 | |

(i) 2010 திசெம்பர் 31 இல் 142 நிறுவனங்களின் ரூபா 121,865,113,583 கூட்டுத்தொகையான அரசிற்குச் சொந்தமான முயற்சிகளில் மூலதனப் பங்களிப்பில் 63 நிறுவனங்களுக்குரிய ரூபா 17,770,840,517 கூட்டுத்தொகையான மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. அம் மீதிகள் உறுதிப்படுத்தப்படாத 13 நிறுவனங்களுக்குரிய ரூபா 6,309,439,166 கூட்டுத்தொகையான மீதிகள் அந்நிறுவனங்களின் ஆண்டறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 134,516,440 கூட்டுத்தொகையான மூலதனத்திற்கு பங்களிப்புச் செய்திருந்த 07 நிறுவனங்களுக்குரிய முயற்சிகள் செயற்பாடற்றிருந்தது. அதன் பிரகாரம் 43 நிறுவனங்களின் ரூபா 11,326,884,911 ஆன மூலதனத்திற்கான பங்களிப்புக்களை குறித்த நிறுவனங்களால் உறுதிப்படுத்தாமையால் அம்மீதிகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| மூலதனப் பங்களிப்பு | நிறுவனங்களின் எண்ணிக்கை | பங்குகளின் பெறுமதி | மீதி உறுதிப்படுததப்பட்ட | | மீதி உறுதிப்படுத்தப்படாத | |
|---|---|---|---|---|---|---|
| | | | நிறுவனங்களின் எண்ணிக்கை | பங்குகளின் பெறுமதி | நிறுவனங்களின் எண்ணிக்கை | பங்குகளின் பெறுமதி |
| | | ரூபா | | ரூபா | | ரூபா |
| அரச வர்த்தக கூட்டுத்தாபனங்களின் மூலதனத்திற்குப் பங்களிப்பு | 33 | 83,659,272,851 | 29 | 79,039,243,116 | 4 | 4,620,029,735 |
| இலங்கை மத்திய வங்கி | 1 | 15,000,000 | 1 | 15,000,000 | 0 | 0 |
| அரசிற்குச் சொந்தமான வேறு நிறுவனங்கள் | 79 | 31,740,085,686 | 36 | 24,505,925,020 | 43 | 7,234,160,666 |
| பெருந்தோட்ட கம்பனிகள் | 24 | 1,677,234,640 | 13 | 534,104,930 | 11 | 1,143,129,710 |
| கம்பனிகளில் அமெரிக்க டொலர்களில் வெளியிடப்பட்ட பங்குகளின் உரித்து | 3 | 224,282,840 | 0 | 0 | 3 | 224,282,840 |
| அபிவிருத்தி வங்கி | 2 | 4,549,237,566 | 0 | 0 | 2 | 4,549,237,566 |
| **மொத்தம்** | **142** | **121,865,113,583** | **79** | **104,094,273,066** | **63** | **17,770,840,517** |

அரச செலவினம் தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 69,112 மில்லியன் வெளிநாட்டுக் கடனும் ரூபா 383,499 உள்நாட்டுக் கடனுமாக மொத்தம் ரூபா 452,611 மில்லியன் கடன்தொகை மீளச்செலுத்தப்பட்டிருந்தது. அது மீளாய்வாண்டின் மொத்த அரச செலவினத்தின் நூற்றுற்கு 25.85 சதவீதமாக இருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடு ரூபா 1,831,655 மில்லியனிலிருந்து ரூபா 1,751,112 மில்லியன் பயன்படுத்திய பின்னர் எஞ்சிய ரூபா 80,542 மில்லியனாக இருந்தது. சேமிப்பு, ஏற்பாடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டின் நூற்றுக்கு 4.39 ஆன சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின வகை | தேறிய நிதிஏற்பாடு | செலவினம் | சேமிப்புக்கள் | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 976,050,553,004 | 951,493,955,879 | 24,556,597,125 | 2.52 |
| அரச முதலீடு | 392,323,914,180 | 347,006,678,875 | 45,317,235,305 | 11.55 |
| வெளிநாட்டு கடன்கொடுப்பனவு | 69,713,100,000 | 69,112,362,273 | 600,737,727 | 0.86 |
| உள்நாட்டுக் கடன் கொடுப்பனவு | 393,567,200,000 | 383,499,478,979 | 10,067,721,021 | 2.56 |
| **மொத்தம்** | **1,831,654,767,184** | **1,751,112,476,006** | **80,542,291,178** | **4.39** |

சேமிப்புக்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 434 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 9,023,825,396 தொகையான நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. அச்செலவின விடயங்களுக்கிடையே அரச முதலீட்டிற்குரிய 283 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,950,847,135 தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

x தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து நூற்றுக்கு 50 இற்கு மேற்பட்ட நூற்றுக்கு 99.99 இடைப்பட்ட சதவீதத்தில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டதுடன் அது 877 செலவின விடயங்களுக்குரிய ரூபா 16,367,429,144 ஆக இருந்தது.

(இ) 2010 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) பிரிவின் பிரகாரம் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 240 ஆம் செலவினத் தலைப்பின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாவது பட்டோலையில் காணப்படும் மீண்டுவரும் செலவினம் அல்லது மூலதனச் செலவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை பாராளுமன்றத்தால் குறித்த தொகைக்காக நிதியாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட அச்சிடப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு கீழாக 08 சந்தர்ப்பங்களில் மட்டும் பணத்தை மாற்ற முடியுமாக இருந்தது.

அதன் பிரகாரம் அந்நிகழ்ச்சித்திட்டம் மூலம் கீழே காட்டப்பட்டுள்ளபடி ரூபா 41,323,424,344 ஆன நிதிஏற்பாடு ஏனைய செலவினத் தலைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

| செலவினம் | நிதியளித்தல் விபரம் | | தேறிய நிதிஏற்பாடு | செலவினத் தலைப்புகளுக்கு வழங்கப்பட்ட ஏற்பாடு | சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| ------- | --------------------- | | ----------------- | ------------ | -------- |
| | | | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டுவருபவை | உள்நாட்டு நிதி | 11 | 13,000,000,000 | 12,857,999,989 | 142,000,011 |
| மூலதனம் | உள்நாட்டு நிதி | 11 | 14,933,000,000 | 14,742,772,577 | 190,227,423 |
| | வெளிநாட்டுக் கடன் | 12 | 8,200,000,000 | 8,199,046,000 | 954,000 |
| | வெளிநாட்டுக்கொடை | 13 | 1,000,000,000 | 195,326,146 | 804,673,854 |
| | மீள் அளிக்கக்கூடிய வெளிநாட்டுக் கொடை | 14 | 567,000,000 | 528,190,000 | 38,810,000 |
| | மீள் அளிக்கக்கூடிய வெளிநாட்டுக் கடன் | 15 | 50,000,000 | - | 50,000,000 |
| | எதிரிணை நிதியம் | 16 | 50,000,000 | - | 50,000,000 |
| | வெளிநாட்டுக் கடன் உள்நாட்டு நிதி | 17 | 4,900,000,000 | 4,800,089,632 | 99,910,368 |
| | | | --------------------- | --------------------- | ------------------ |
| | **மொத்தம்** | | **42,700,000,000** | **41,323,424,344** | **1,376,575,656** |
| | | | ============ | ============ | =========== |

### 22.2.4 வெளிநாட்டுக் கடன் பயன்பாடு

2010 திசெம்பர் 31 வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்திட்டங்களிலிருந்து ரூபா 2,106.6 மில்லியன் தொகைக்கு இணக்கம் காணப்பட்ட 2 வெளிநாட்டு கடன் செயற்திட்டங்கள் அத்தகதி வரையில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அவ்விரண்டு செயற்திட்டங்களில் ரூபா 1,112.5 மில்லியன் ஆன செயற்திட்டமொன்று பூர்த்தி செய்யப்பட்டதாக கணக்காய்விற்காக அறிக்கையிடப்பட்டிருந்த போதும் அதன் பயன்பாடு தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 994.12 மில்லியன் ஆன செயற்திட்டமொன்று செயற்படுத்தப்படாமையால் கடன்வழங்குனரிடம் காலத்தை நீடிக்குமாறு அரசினால் கோராப்பட்டிருந்தது. எனினும் 2012 யூன் 25 ஆம் திகதி வரை அதன் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அச்செயற்திட்டத்தின் எவ்வித பயன்பாடும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

### 22.2.5 வெளிநாட்டு மானியங்களின் பயன்பாடு

2010 திசெம்பர் 31 வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய 47 செயற்திட்டங்களுக்குரிய மானியங்கள் ரூபா 26,698.2 ஆக இருந்தது. அதில் ரூபா 15,096.2 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 11,602.0 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பயன்படுத்தப்படாத தொகை இணங்கப்பட்ட மானியங்களில் 30.7 முதல் 100 இற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது. அதில் 16 செயற்திட்டங்களுக்காக இணங்கப்பட்டிருந்த ரூபா 2,640.11 மில்லியனான மானியங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 22.2.6 குடியரசின் பொறுப்புக்கள்

2010 திசெம்பர் 31 வரையில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குடியரசின் மொத்த பொறுப்புக்கள் ரூபா 4,333,639 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டின் போது அது ரூபா 3,897,453 மில்லியனுடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 12.85 வீதத்தால் அல்லது ரூபா 436,186 மில்லியன் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ் அதிகரிப்பினை பின்வருமாறு பகுப்பாய்வு செய்ய முடியும்.